DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR

**Case No:CC.26/2018**
Prosecution witness **PW.4 (LW.5)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Sivanandam | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 10:55 a.m. to 11:20 a.m. | | |

**(Accused present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 17.07.2025

17.07.2025 முதல் விசாரணை

நான் தற்பொழுது டேன்டீ நிறுவனத்தில் கம்பெனி செக்ரட்டரியாகவும் கூடதல் பொறுப்பாக சீப் பினான்சியல் ஆபீசராகவும் பணிபுரிந்து வருகிறேன். அச.ா1. கண்ணன் எங்களது நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறார்.

1) 08.12.2016ம் தேதி நான் எனது அலுவலகத்தில் பணியிலிருந்தபோது எங்களது அலுவலக வரவேற்பறைக்கு கோவை யூனியன் பேங்க் மேனேஜர் போன் செய்து தொட்டபெட்டாவை சேர்ந்த கே.மனோகரன் என்பவர் தங்களது வங்கி கிளையில் வீட்டுக்கடனுக்காக அப்ளை செய்திருப்பதாகவும் அந்த விண்ணப்பத்துடன் தான் கணக்கு வைத்திருக்கும் யூகோ வங்கி உதகை கிளையின் கணக்கு நகலை இணைத்து கொடுத்திருப்பதாகவும் அந்த கணக்கு நகலில் எதிரியின் வங்கி கணக்கிற்கு எங்களது டேன்டீ நிறுவனத்திலிருந்து சுமார் 4 மாதங்கள் சம்பளம் வரவு வைக்கப்பட்டிருப்பதாகவும் ஆனால் மேற்படி யூகோ வங்கி உதகை கிளையில் அவ்வாறு எதிரியின் பெயருக்கு எந்த ஒரு கணக்கு பட்டியலும் வழங்கப்படவில்லை என்று தங்களுக்கு தெரிவித்ததாகவும் எனவே மேற்படி எதிரி மனோகரன் எங்களது அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறாரா என்று மேலாளர் அ.சா.1 கண்ணன் அவர்களிடம் கேட்கப்பட்டது.

2) அதற்கு மேலாளர் திரு.கண்ணன் அவர்கள் எங்களது நிறுவனத்தில் மனோகரன் என்ற பெயரில் யாரும் வேலை செய்யவில்லை என்றும் மேற்படி மனோகரன் உங்களிடம் தாக்கல் செய்த ஆவணத்தை எங்களது அலுவலகத்திற்கு மெயில் மூலம் அனுப்பி வைக்குமாறும் அவ்வாறு அனுப்பி வைக்கும்பட்சத்தில் அந்த ஆவணங்களை பரிசீலனை செய்து கூறுவதாகவும் சம்பந்தப்பட்ட வங்கி மேலாளரிடம் கூறினார். அதன்பேரில் 08.12.2016ம் தேதியிட்டு டேன்டீ அப்பாயின்ட்மென்ட் லெட்டர், 2016ம் ஆண்டின் ஆகஸ்டு முதல் நவம்பர் வரையிலான சம்பளபட்டியல், 01.04.2016 முதல் 01.12.2016 வரையிலான மனோகரனின் யூகோ பேங்க் கணக்கு நகல் மற்றும் 2015-2016 அசஸ்மென்ட் இயரின் பார்ம்-16ம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அந்த பார்ம்-16இல் எனது பெயரான பாலுசாமி சிவானந்தம் என்பதற்கு பதிலாக பத்மநாபன் சிவானந்தம் என்று பெயர் குறிப்பிடப்பட்டு அதில் கையொப்பம் இடப்பட்டிருந்தது. அந்த கையொப்பமும் என்னுடையது அல்ல. மேற்படி மெயிலை 09.12.2016ம் தேதி எங்களது மேலாளர் திரு.கண்ணன் பெற்றுக்கொண்டு ஆவணங்களுடன் சரிபார்த்தபோது மேற்படி அப்பாயின்ட்மென்ட் லெட்டர் மற்றும் இதர ஆவணங்கள் எங்களது நிறுவனத்தால் வழங்கப்படாததாலும் அவை போலியாக தயார் செய்யப்பட்டுள்ளதாலும் அன்றையதினமே இதுகுறித்து உதகை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு ஒரு புகார் அனுப்பினார். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> - (எதிரி தரப்பில்)

1) டேன்டீ நிறுவனத்திற்கு தமிழ்நாடு முழுவதும் அலுவலகங்கள் உள்ளதென்றால் சரியல்ல, குன்னூரில் தலைமை அலுவலகமும் கூடலூர் ரீஜியன், ஊட்டி ரீஜியன், வால்பாறை ரீஜியன் ஆகிய கிளை அலுவலகங்களும் சென்னையில் சேர்மென் அலுவலகமும் உள்ளது. மேற்படி கிளை அலுவலகங்களில் மனோகரன் என்ற நபர் வேலை பார்த்து வருகிறாராஎன்று எங்களத மேலாளர் ஆவணங்களை சரிபார்த்தாரா என்றால் குன்னூர் தான் தலைமை அலுவலகம் என்பதால் அனைத்து ஊழியர்களுக்கும் இங்கிருந்து தான் சம்பளம் பட்டுவாடா செய்யப்படும் என்பதால்

தலைமை அலுவலகத்திலுள்ள ஆவணங்களை சரிபார்த்து அவ்வாறு மனோகரன் என்பவர் எங்களது அலுவலகத்தில் பணிபுரியவில்லை என்று தெரிவித்தார்.

2) நான் நேரடியாக எந்த ஒரு வங்கிக்கும் தொடர்பு கொண்டு சம்பந்தப்பட்ட ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை, எங்களது மேலாளர் அ.சா.1 கண்ணன் அவர்கள் தான் வாங்கி பார்த்தார். மேற்படி ஆவணங்களின் அசல் ஆவணங்களை சம்பந்தப்பட்ட வங்கி கிளையிலிருந்து வரவழைத்து பார்த்தோமா என்றால் இல்லை. அ.சா.1 கண்ணன் அவர்கள் என்னிடம் படிவம்-16இன் நகலை தான் காட்டி விசாரித்தாரா என்றால் நகல் தான் மெயில் மூலம் வந்ததால் அதை காட்டி விசாரித்தார். நானும் அ.சா.1 மேலாளரும் ஒரே பணி நிலை தான்.

3) அ.சா.1 கண்ணன் எங்களது அலுவலகத்தில் சட்ட மேலாளர் என்றால் சரிதான். மேலும் நிர்வாக மேலாளராகவும் பணிபுரிந்து வருகிறார். எங்களது நிறுவனத்தில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றால் அதுதொடர்பாக புகார் அளிப்பதற்கு மேலாண்மை இயக்குநருக்குத்தான் அதிகாரம் உள்ளது என்றால் அவரது உத்தரவின்படி மேலாளர் புகார் அளிப்பதற்கு அதிகாரம் உள்ளது. மேலாண்மை இயக்குநரிடமிருந்து புகார் அளிப்பது தொடர்பாக எழுத்துமூலமாக உத்தரவு வந்ததா என்றால் ஆம், வந்தது. அவ்வாறு வந்த எழுத்துமூலமான உத்தரவை போலிசாரிடம் காட்டினோமா என்றால் விசாரணையின் போது போலிசார் கேட்காததால் காட்டவில்லை. நான் சொல்வதுபோல் எங்களது மேலாண்மை இயக்குநர் அவ்வாறு எழுத்துமூலமாக எந்த ஒரு உத்தரவும் கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் அதை போலிசார் விசாரணையின்போது கொடுத்திருப்போம் என்றால் சரியல்ல.

4) குறிப்பிட்டு கோவையிலுள்ள யூகோ வங்கியின் எந்த கிளையிலிருந்து மெயில் வந்தது என்றால் யூகோ வங்கி கோவை கிளை என்று தான் மெயில் வந்தது. குறிப்பிட்டு எந்த கிளை என்று நாங்கள் விசாரிக்கவில்லை. புகார் கொடுப்பதற்கு எங்களது மேலாளர் எத்தனை நாள் நேரம் எடுத்துக்கொண்டார் என்றால் மெயில் பெறப்பட்ட 09.12.2016ம் தேதியன்றே புகார் கொடுத்துவிட்டார். மேல்குன்னூர் காவல்நிலையம்

எங்களது அலுவலகத்திலிருந்து சுமார் 3 கிமீ தூரத்தில் உள்ளது. சம்பந்தப்பட்ட மேல்குன்னூர் காவல்நிலையத்தில் நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் மேலாண் இயக்குநர் அளித்த உத்தரவின்பேரில் காவல்துறை கண்காணிப்பாளருக்குத்தான் புகார் கொடுத்தோம்.

5) புகார் தயார் செய்தபோது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. அந்த புகாரை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. அ.சா.1 கண்ணனுக்கு நிர்வாக மேலாண்மை குறித்து தெரியாது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கு குற்ற சம்பவத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றும் மேலாளர் கொடுத்த பொய்புகாருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்.